# அரையாண்டுத் தேர்வு - 2024

வகுப்பு : 12
காலம் : 3.00 மணி

## பொதுத்தமிழ்

பதிவு எண் :
மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள்:** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு:** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. 14×1=14

1. "உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்" – இத்தொடர் உணர்த்தும் பண்பு ______

(அ) முரண் பண்பு (ஆ) நேர்மறைப் பண்பு

(இ) எதிர்மறைப் பண்பு (ஈ) இவை அனைத்தும்

2. "உவா உற வந்து கூடும் உடுபதி, இரவி ஒத்தார்" – யார் யார்?

(அ) இராமன், குகன் (ஆ) இராமன், சுக்ரீவன்.

(இ) சடாயு, இராமன் (ஈ) இராமன், சவரி

3. வெண்பாவிற்குரிய ஓசை ______

(அ) அகவலோசை (ஆ) துள்ளலோசை

(இ) தூங்கலோசை (ஈ) செப்பலோசை

4. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?

(அ) வேளாண்மை (ஆ) இலக்கியம் (இ) கணிதம் (ஈ) புவியியல்

5. 'பொய்யா வானம் <u>புதுப்பெயல்</u> பொழிந்தென' – தடித்த சொல்லின் இலக்கணக்குறிப்பு

(அ) வினைத்தொகை (ஆ) பண்புத்தொகை

(இ) தொழிற்பெயர் (ஈ) பெயரெச்சம்

6. அசையும் உருவங்களைப் படம்பிடிக்கும் கருவியைக் கண்டுபிடித்தவர் ______.

(அ) லூமியர் சகோதரர்கள் (ஆ) ஜார்ஜ் மிலி

(இ) தாமஸ் ஆல்வா எடிசன் (ஈ) சாமிக்கண்ணு வின்சென்ட்

7. பொருத்துக.

(அ) நிலவுப்பூ – (1) தி.சு.நடராசன்

(ஆ) தமிழ் அழகியல் – (2) பரலி சு.நெல்லையப்பர்

(இ) உய்யும் வழி – (3) கி.ராஜநாராயணன்

(ஈ) கிடை – (4) சிற்பி பாலசுப்பிரமணியம்

(அ) அ–4, ஆ–1, இ–3, ஈ–2 (ஆ) அ–4, ஆ–3 இ–1, ஈ–2

(இ) அ–4, ஆ–3, இ–2, ஈ–1 (ஈ) அ–4, ஆ–1, இ–2, ஈ–3

8. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத்தலைவனின் இன்றைய நிலப்பகுதி ______

(அ) திண்டிவனம் (ஆ) தருமபுரி (இ) உதகமண்டலம் (ஈ) விழுப்புரம்

9. பிழையற்ற தொடரைத் தேர்வு செய்க.

(அ) பேருந்து மோதி மிதிவண்டியில் சென்றவர் காயம்.

(ஆ) ஆண்டுதோறும் மறைந்த தி.ஜானகிராமன் நினைவாகக் கூட்டம் நடைபெறும்.

(இ) பறவை நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்றது.

(ஈ) இராமனுடன் இலக்குவணனும் காட்டிற்குப் பணிவிடை செய்யப் புறப்பட்டான்.

10. பொருந்தாத இணையைத் தேர்வு செய்க.

(அ) அஞ்ஞாடி – பூமணி (ஆ) சாய்வு நாற்காலி – வெ.இறையன்பு

(இ) கோடை மழை – சாந்தா தத் (ஈ) முதல்கல் – உத்தமசோழன்

11. முச்சந்தி இலக்கியம் என்பது

**கூற்று 1:** கதை வடிவிலான வடிவம் உடையது.

**கூற்று 2:** பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது.

(அ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி (ஆ) கூற்று 1, 2 சரி

(இ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு (ஈ) கூற்று 1, 2 தவறு

12. "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" எனக் குறிப்பிடும் நூல் ______

(அ) அகநானூறு (ஆ) ஐங்குறுநூறு

(இ) குறுந்தொகை (ஈ) புறநானூறு

13. திண்ணியர் என்பதன் பொருள் ______

(அ) தீக்காய்வார் (ஆ) அறிவுடையார்

(இ) அறிவினார் (ஈ) மன உறுதியுடையவர்

14. அவன், அவள், அவர் – என்பன ______

(அ) தன்மைப் பன்மைப் பெயர்கள் (ஆ) பதிலிடு பெயர்கள்

(இ) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை (ஈ) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை

## பகுதி – II

### பிரிவு – 1

எவையேனும் **மூன்றனுக்கு** விடை தருக. 3×2=6

15. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?

16. கடையெழு வள்ளல்களைக் குறிப்பிடுக.

17. ஒருமுக எழினி, பொருமுக எழினி – குறிப்பு எழுதுக.

18. சினத்தை ஏன் காக்க வேண்டும்?

### பிரிவு – 2

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×2=4

19. நடையியல் – விளக்கம் தருக.

20. அக்காலத்துக் கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?

21. படத்தொகுப்பு என்றால் என்ன?

### பிரிவு – 3

எவையேனும் **ஏழனுக்கு** விடை தருக. 7×2=14

22. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

(அ) கண்டான் (ஆ) ஈந்த

23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

(அ) ஒருமையுடன் (ஆ) அருங்கானம்

24. பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.

25. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.

26. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.

கான், காண்

27. தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.

28. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

(அ) தலைமை (ஆ) கோவில்

29. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.

30. கலைச்சொல்லாக்கம் தருக.

(அ) Biography (ஆ) Black's Town

குறிப்பு: செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.

உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

எலியும் பூனையும்போல

## பகுதி – III

### பிரிவு –1

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×4=8

31. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

32. திருக்குறள் – நூற்குறிப்பு எழுதுக.

33. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்?

34. 'ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

### பிரிவு – 2

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×4=8

35. பேரிடர்களிலிருந்து தற்காத்துக்கொள்ள மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை?

36. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

37. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

38. நேர மேலாண்மை குறித்து விளக்குக.

### பிரிவு – 3

எவையேனும் **மூன்றனுக்கு** விடை தருக. 3×4=12

39. (அ) பொருள் வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

**(அல்லது)**

(ஆ) எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

– இக்குறட்பாவில் பயின்று வரும் அணியைச்சுட்டி விளக்குக.

40. (அ) வாகைத் திணையைச் சான்று தந்து விளக்குக.

**(அல்லது)**

(ஆ) பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக.

41. கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.

(அ) உங்களுக்கு ............. **(யார்)** நன்மை என நினைக்கிறீர்கள்?

(ஆ) நம்முடைய ............. **(தேவை)** அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

(இ) கபிலன் திறமையானவர் என்று ............. **(குமரன்)** தெரியும்.

(ஈ) முருகன் வேகமாகச் சென்றும் ............. **(பேருந்து)** பிடிக்க இயலவில்லை.

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.

(அ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்.

**(அல்லது)**

(ஆ) தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான்

43. இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.

பிறப்பினால் எவர்க்கும் – உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் – நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!

– கவிமணி தேசிக விநாயகம்

## பகுதி – IV

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. 3×6=18

44. (அ) 'அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும்' என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.

**(அல்லது)**

(ஆ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

45. (அ) 'குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்புக் கட்டமைக்கப்படுகிறது' – எவ்வாறு? விளக்குக.

**(அல்லது)**

(ஆ) மயிலையார், ஓர் "ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் மெய்ப்பிக்க.

46. (அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

**(அல்லது)**

(ஆ) 'நடிகர் திலகம்' என்ற பட்டம் சிவாஜி கணேசனுக்குப் பொருத்தமானதே! – நிறுவுக.

## பகுதி – V

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** 4+2=6

(அ) 'காய்நெல்........' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை எழுதுக.

(ஆ) 'அஃகாமை .......' எனத் தொடங்கும் குறளை எழுதுக.

************